கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு **134/2023**

வாதி தரப்பு சாட்சி –1 **மாணிக்கவாசகம்** என்பவரை செல்வி.கொ.சிவசங்கரி, தட்டச்சர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது தகப்பனார் பெயர் வேலுச்சாமி ஆகும். எனது தாயார் பெயர் எள்ளம்மாள் ஆகும். எனது தாய் மற்றும் தந்தைக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 4 குழந்தைகள். அவர்கள் முறையே விஜயலெட்சுமி, முத்துலெட்சுமி, சீரங்கன், மாணிக்க வாசகம் ஆகியோர். எனது தந்தை வேலுச்சாமிக்கு உடன்பிறந்தவர்கள் உள்ளனரா என்றால் எனது சித்தப்பா துரைசாமி உள்ளார். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் கடந்த 1991 ம் வருடம் இறந்தார். எனது தாயார் எப்போது இறந்தார் என்றால் கடந்த 2013 ல் இறந்தார். எனது சித்தப்பா துரைசாமி எப்போது இறந்தார் என்றால் 1997 ல் இறந்தார்.

2. எனது சித்தப்பா துரைசாமிக்கு திருமணம் ஆனதா என்றால் இல்லை. துரைசாமிக்கு வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். மேற்படி துரைசாமிக்கு விஜயலெட்சுமி, முத்துலெட்சுமி, சீரங்கன், மாணிக்க வாசகம் ஆகியோரை வாரிசுகளாக காண்பித்து தான் வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் என்ன வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது கார் ஓட்டுநராக சென்னையில் பணிபுரிகிறேன். சர்வே எண். 810/3 ல் ஓட்டு வீடு உள்ளதா என்றால் கடந்த 1962 லிருந்து மேற்படி ஓட்டு வீடு அங்கு உள்ளது. மேற்படி ஓட்டு வீட்டில் 1 ம் பிரதிவாதி சீரங்க ரெட்டியார் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

3. அவருக்கு திருமணமானதிலிருந்து அங்கு தான் குடியிருக்கிறார். எனது ஊரில் நான் குடியிருக்கும் வீடானது யாருடையது என்றால் எனது தாய் மாமா துரைசாமியின் வீடாகும். நான் குடியிருக்கும் எனது தாய் மாமா வீட்டில் தான் நானும், எனது அக்கா விஜயலெட்சுமியும் ஒன்றாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். சர்வே எண்.810/3 ல் உள்ள ஓட்டு வீடு தற்போது உள்ளதா என்றால் இல்லை. கடந்த 2020 ம் ஆண்டில் மேற்படி

நிலத்தை கிரையம் பெற்ற நபர்கள் ஓட்டு வீட்டை இடித்துவிட்டார்கள். 1960 முதல் 2020 வரை எனது அண்ணன் சீரங்க ரெட்டியார் தான் மேற்படி ஓட்டு வீட்டில் குடியிருந்து வந்தார் என்றால்சரிதான்.

4. எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட பூர்வீக நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. ஊருக்குள் எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட பூர்வீக நிலம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து மட்டுமே பிரிக்கப்படாமல் உள்ளது. சர்வே எண்.810/3Bல் வடக்கே ஓட்டு வீடும், தெற்கே காலி இடமும் உள்ளது என்றால் சரிதான். எனது அண்ணன் சீரங்க ரெட்டியார் தான் ஓட்டு வீட்டில் குடியிருந்து கொண்டு மேற்படி காலி இடத்தையும் அனுபவம் செய்தார் என்றால் சரியல்ல. காலி இடத்தை ஆடு, மாடுகள் கட்டி 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் எந்த வருடம் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் கடந்த 2004ம் வருடம் ஆகும்.

5. மேற்படி பாகப்பிரிவினையின் போது தாவா சொத்தை தவிர மற்ற சொத்துக்களை சரிசமமாக பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு கடந்த 1995ல் மேற்படி இடத்திற்கு நத்தம் பட்டா கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஓட்டு வீட்டிற்கு யார் பெயரில் வீட்டு வரி கட்டப்பட்டது என்றால் எனது தந்தை பெயரில் இருந்தது. தற்போது 1ம் பிரதிவாதி வீட்டு வரி செலுத்தி வருகிறார். மேற்படி ஓட்டு வீட்டிற்கு மின் இணைப்பு 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி பாகப்பிரிவினையில் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் எவ்வளவு நிலம் பிரிந்தது என்றால் 1ம் பிரதிவாதிக்கு 4 ¼ ஏக்கரும், எனக்கு ஏக்கர் 4.37 சென்ட் பிரிந்தது.

6. அதில் எனக்கு பிரிந்த 37 சென்ட் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி 37 சென்ட் நிலத்தை பொறுத்து எனக்கு எதுவும் ஆவணங்கள் வருவாய்துறையில் கொடுத்தார்களா என்றால் இல்லை. 03.03.2004ம் தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள அ அட்டவணை சொத்து 1ம் பிரதிவாதிக்கு பிரிந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் 1ம் பிரதிவாதிக்கு

ஏக்கர் 1.42 சென்ட் தான் பிரிந்துள்ளது என்றால் சரிதான். ஆனால் 3 ஏக்கர் நிலமானது ஏற்கனவே 1ம் பிரதிவாதியால் தனியாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரைய ஆவணத்தில் நாங்கள் கையொப்பம் செய்துள்ளோம்.

7. பாகப்பிரிவினை பத்திரத்திற்கு முன்னர் எவ்வாறு விற்பனை செய்ய முடியும் என்றால் 1 வாரத்திற்கு முன்னர் வாய்க்காரராக பேசியதின் அடிப்படையில் 1ம் பிரதிவாதியால் விற்பனை செய்யப்பட்டு அதில் நாங்கள் கையொப்பம் செய்துள்ளோம். மேற்படி வாய்க்காரராக பேசியதாக சொல்லும் விவரங்கள் மேற்சொன்ன பாகப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது சகோதரிகள் விஜயலெட்சுமி, முத்துலெட்சுமிக்கு தனியாக பாகம் பிரித்து கொடுத்துள்ளோமா என்றால் விஜயலெட்சுமிக்கு பணம் கொடுத்துவிட்டோம். முத்து லெட்சுமிக்கு தனியாக பாகம் கொடுத்துவிட்டோம்.

8. மேற்படி பாகப்பிரிவினையில் முத்துலெட்சுமிக்க எவ்வளவு பாகம் பிரிந்தது என்றால் சுமார் 40 சென்ட் ஆகும். 2004 பாகப்பிரிவினைக்கு முன்பே 1992ல் ஒரு பாகப்பரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி 1992 பாகப்பிரிவினையில் எனது இறந்த போன சகோதராகிய சுந்தர்ராஜ் என்பவரின் மனைவிக்கு மேற்படி சுந்தர்ராஜ்க்கு கிடைக்கக்கூடிய பங்கை பிரித்து கொடுத்து விட்டோம். தாவா சொத்தை மேற்படி பாகப்பிரிவினையில் ஏன் சேர்க்கவில்லை என்றால் எனது தாயார் உயிருடன் இருக்கும் வரை மேற்படி சொத்தை பிரிக்க வேண்டாம் என்று நாங்கள் முடிவு செய்ததால் தாவா சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை ஏதுவும் செய்யவில்லை.

9. மேற்படி தாவா சொத்தை எனது தாயார் இறப்பிற்கு பிறகு சமமாக பிரித்து கொள்ளலாம் என்று பேசியதாக மேற்படி பாகப்பத்திரங்களில் குறிப்பிட்டு எழுதப்பட்டுளளதா என்றால் இல்லை. மேற்படி 03.03.2004ம் தேதி பாகப்பிரிவினை பத்திரத்தில் இனி நாம் பிரித்து கொள்ள வேண்டிய சொத்துக்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி அவரது திருமணத்திலிருந்து ஆக்கிரமித்து வசித்து வந்து அதன் பேரில் அவருக்கு நத்தம் பட்டா

ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.  ஆரம்பத்திலிருந்து தாவா சொத்திற்கு எனது தாத்தா பெயரில் தான் பட்டா உள்ளது.  மேற்படி பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**